

தனி பிரதி
ரூ.10/-

PORIYIYAL KADHIR



# பொறியியல் கதிர்

கதிர் 47 | பாரிப்பு 8 | திருவள்ளுவர் ஆண்டு 2046 | ஏப்ரல் 2016




13.02.2016 அன்று புதுக்கோட்டையில் நடந்த மாநில செயற்குழு கூட்டத்தில் TNEA பொதுச் செயலாளர் பொறி.த.முருகேசன் அவர்கள் ஊடகங்களுக்கு பேட்டி அளிக்கிறார்..

நூற்றாண்டு விழா சங்கம் - A CENTENARY ASSOCIATION

தோற்றம்
1910

## தமிழ்நாடு பொறியியல் சங்கம்

பொதுப்பணித்துறை
சேப்பாக்கம், சென்னை - 600 005.

நூற்றாண்டு
2010

அரசு ஆணை எண்: Ms. 822 நாள். 27.09.1928 அங்கீகரிக்கப்பட்டது

TAMILNADU ENGINEERING ASSOCIATION - PWD
CHEPAUK, CHENNAI - 600 005.

வேலூர் கிளை உறுப்பினர் K.L.ஆரோக்கியசாமி அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி அவரின் குடும்பத்தாருக்கு உதவி தொகை வழங்குதல்




புதுக்கோட்டை கிளை உறுப்பினர் A. கிருஷ்ணகுமார் அவர்கள் இயற்கை எய்தியதையொட்டி அவரின் குடும்பத்தாருக்கு உதவி தொகை வழங்குதல்



## பொதுச் செயலாளர் மடல்



### மடல் - 8 (2015 - 2016)

# தொடரும் நம் பயணம் .......

## அன்பார்ந்த பொறியாளர் சகோதர, சகோதரிகளே! வணக்கம்!

22 சிவில் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கும், 2 மின்னியல் தொழில் நுட்ப உதவியாளர்களுக்கும் இளநிலை பொறியாளர் பதவி உயர்வு அளித்த தலைமை பொறியாளர் (பொது) அவர்களுக்கு தமிழ்நாடு பொறியியல் சங்கம் தன் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலுவையில் உள்ள கோப்புகளில் இரண்டு கோப்புகளை தவிர மீதமுள்ள கோப்புகள் முடிக்கப்பட்டுவிட்டன. பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர் பதவி பெயர் மாற்றம் அளிக்கும் கோப்பு மற்றும் பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில் நுட்ப உதவியாளர் / வரைவாளர் பதவி உயர்வு அளிக்கும் கோப்பு நிலுவையில் உள்ளது.

பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலை பொறியாளர்களுக்கு உதவி பொறியாளர் பதவி பெயர் மாற்றம் வழங்குவதில் தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இல்லாத ஒன்றை இருப்பதாக கற்பனை செய்து கொண்டு தேவையற்ற கால தாமதத்தை ஏற்படுத்தி வருகிறார்கள். இது மிகவும் வருத்தத்துக்குரிய செயலாகும். விதிகளிலும், நீதிமன்ற தீர்ப்புகளிலும் கூறப்பட்டுள்ளதை கருத்தில் கொள்ளாமல், "விரிவாக விவாதிப்போம்" "விரிவாக விவாதிப்போம்" என்று பல்வேறு நொண்டிச் சாக்குகளை சொல்லிக்கொண்டு காலதாமதம் ஏற்படுத்தி வருகிறார்கள். நாமும் தொடர்ந்து இந்த கோப்பை முடித்துத் தருமாறு வலியுறுத்தி வருகிறோம். முடித்துத் தருவார்கள் என்று நம்புவோம்.

அடுத்ததாக பணி ஆய்வாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கும் கோப்பு. ஏற்கனவே பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்கள் மற்றும் இதர பிரிவினருக்கு தொழில் நுட்ப உதவியாளர் பதவி உயர்வு ஆணை தலைமை பொறியாளர் (பொது)

அவர்களால் வழங்கப்பட்டு பிறகு அதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க தலைமை பொறியாளர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்காக சொல்லப்படும் காரணங்கள் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இல்லை.பொறுத்திருந்து பார்ப்போம்.

அடுத்து பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு விதித்திருத்த ஆணை வழங்கப்பட்ட பிறகே வரைவாளர் பதவி உயர்வு அளிக்க முடியும் என்று தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் கூறியுள்ளார். விதித்திருத்த கோப்பு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் விதித்திருத்த அரசாணை பெற்றுத்தரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். ஆனால் இந்த விதித்திருத்த ஆணை இல்லாமலேயே பணி ஆய்வாளர்களுக்கு வரைவாளர் பதவி உயர்வு அளிக்க தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் ஏற்கனவே ஒத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

தற்போது இளநிலை பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள் ஆகியோர்களுக்கு தற்காலிக முதுநிலை பட்டியல் தயாரிக்கப்பட்டு சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. இது தவறானது என்று சுட்டிக்காட்டியுள்ளோம். அதை சரிசெய்வதாக உறுதியளித்துள்ளார்கள். இது சம்மந்தமாக அந்த பட்டியலில் இடம் பெற்றுள்ள இளநிலைப் பொறியாளர்கள் மற்றும் உதவி பொறியாளர்கள் என்ன செய்ய வேண்டும் என்று தனியாக தெரிவிக்கப்படும். அதன்படி கண்டிப்பாக செயல்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

**வாழ்க தமிழ்நாடு பொறியியல் சங்கம்**
**வளர்க பொறியாளர்களின் சங்க உணர்வு**
**தேச நலன் காப்போம்.**

இத்துடன் இந்த மடலை நிறைவு செய்கிறேன். மீண்டும் அடுத்த மடலில் சந்திப்போம். நன்றி.

(த. முருகேசன்)
பொதுச் செயலாளர்

**Er.D. MURUGESAN, General Secretary**
**Cell Nos.** 9444 999 588, 988 444 98 97
**E.mail: d.murugavelsivan@gmail.com**

## இளநிலைப் பொறியாளர் / உதவி பொறியாளர் முதுநிலைப் பட்டியல் முக்கிய அறிவிப்பு

அன்பார்ந்த பொறியாளர் சகோதர சகோதரிகளே, தற்போது தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் இளம் பொறியாளர் / உதவி பொறியாளர்களின் முதுநிலைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு சுற்றுக்கு விடப்பட்டுள்ளது. அதற்கு கீழ்க்கண்டவாறு பதிலளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறோம்.

1. உதவி பொறியாளர்கள் முதுநிலை பட்டியல்

   (a) 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவி பொறியாளர்களை தேர்வு செய்யும்போதுதான் முதன் முதலாக கட்டிடப் பிரிவு (Buildings Organisation) நீர்வள ஆதாரத்துறை (WRD) என்று தனித்தனியாக தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே 2007க்கு முன்னர் ஊட்டுப்பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற உதவி பொறியாளர்களை கட்டிட பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரிக்கக்கூடாது.

   (b) ஊட்டுப்பதவியிலிருந்து உதவி பொறியாளர் பதவி பெற்றவர்களை உதவி பொறியாளர் முதுநிலையில்தான் வைக்க வேண்டும். உதவி பொறியாளர்களை இளம் பொறியாளர் முதுநிலையில் வைப்பது விதிகளுக்கும், அரசாணைகளுக்கும் எதிரான செயலாகும்.

2. இளநிலைப் பொறியாளர்கள் முதுநிலை பட்டியல்

   (a) 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) மூலம் உதவி பொறியாளர்களை தேர்வு செய்யும்போதுதான் முதன் முதலாக கட்டிடப் பிரிவு (Buildings Organisation) நீர்வள ஆதாரத்துறை (WRD) என்று தனித்தனியாக தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே 2007க்கு முன்னர் ஊட்டுப்பதவியிலிருந்து பதவி உயர்வு பெற்ற இளநிலை பொறியாளர்களை கட்டிட பிரிவு, நீர்வள ஆதாரத்துறை என தனித்தனியாக பிரிக்கக்கூடாது.

   (b) 2006 ஆம் ஆண்டு ஊட்டுப்பதவியிலிருந்து இளம் பொறியாளர் பதவி உயர்வு பெற்ற திரு.ஞானசேகரன் உள்ளிட்ட 8 நபர்களை 1997 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முதுநிலை பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. இது ஒரு தவறான செயலாகும். எனவே மேற்கண்ட 8 பேரை 2006 ஆம் ஆண்டு இளம் பொறியாளர் முதுநிலையில் வைக்க வேண்டும்.

# 13.02.2016 அன்று புதுக்கோட்டையில் நடைபெற்ற மாநில செயற்குழுக் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் 13.02.2016 சனிக்கிழமை காலை 10.30 மணி அளவில் புதுக்கோட்டையில் மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் த. முருகேசன் அவர்கள் முன்னிலையில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் இனிதே ஆரம்பமானது.

அமைப்பு மற்றும் சட்டச் செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் அவைக்கு அறிமுகம் செய்து வைத்தார். புதுக்கோட்டை கிளையின் சார்பாக கிளைத் தலைவர் பொறியாளர் K. சத்தார் அவர்களும், மையச் சங்கம் சார்பாக கிழக்கு மண்டல செயலாளர் பொறியாளர் R. தயாளகுமார் அவர்களும் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

நமது சங்கத்தைச் சார்ந்த பொறியாளர்கள் மற்றும் பொறியாளர்களின் குடும்பத்தில் மறைந்தவர்களுக்காக இரங்கல் தெரிவித்து மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாநிலத் தலைவர் பொறியாளர் எம். பஞ்சவர்ணம் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க செயல்பாடுகள் குறித்து பேசினார். மாநில துணைத் தலைவர் பொறியாளர் S. பாஸ்கரன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் பற்றி உரையாற்றினார்.

கூட்டத்திற்கு வந்திருந்த மையச் சங்க பொறுப்பாளர்களுக்கும் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் புதுக்கோட்டை கிளையின் சார்பாக பொன்னாடைகள் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

சென்ற மையச்செயற்குழுகூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்களின் தற்போதைய நிலை குறித்து அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் அவைக்கு தெரிவித்து ஒப்புதல் பெற்றார்.

பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் சங்க நடவடிக்கைகள் குறித்து மிக விரிவாக எடுத்துரைத்தார்.

உறுப்பினர் கருத்துக்கள் பகுதியில் பொறியாளர்கள் K.K.ஆறுமுகம் செயலாளர் திண்டுக்கல் கிளை, K.N. இரஞ்சன் பொருளாளர் கோவை - பொள்ளாச்சி கிளை, R. வேதமூர்த்தி தலைவர் தஞ்சாவூர் கிளை, A.திருவேங்கடமூர்த்தி துணைத்தலைவர் சிவகங்கை கிளை, T. வெங்கடேசன் பொருளாளர் தருமபுரி கிளை, R.G..மணிவேலன் உறுப்பினர் திருவாரூர் - நாகை கிளை, R.வேதநாராயணன் செயலாளர் சேலம் கிளை, K. ஆதிமூலம் செயலாளர் திருநெல்வேலி தூத்துக்குடி கிளை, D.வீரய்யன் துணைத்தலைவர் புதுக்கோட்டை கிளை, V.சிவப்பிரகாசம் பொருளாளர் தஞ்சாவூர் கிளை, S.பொன்னுசாமி தலைவர் கோவை பொள்ளாச்சி கிளை, K. சிவக்குமார் பொருளாளர் திருவாரூர் - நாகை கிளை, D.சந்திரன் பொருளாளர் மதுரை கிளை, V.பரமசிவம் தலைவர் சிவகங்கை கிளை, C.கணபதி உறுப்பினர் திருவாரூர் - நாகை கிளை. S.பாண்டியன் பொருளாளர் சேலம் கிளை, M.தாணுமூர்த்தி செயலாளர் கன்னியாகுமரி கிளை ஆகியோர் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.

உறுப்பினர்களின் கருத்துக்களுக்கு பொதுச்செயலாளர் விரிவான விளக்கம் அளித்தார்.

நிதிச்செயலாளர் பொறியாளர் K.கமால்தீன் அவர்களால் 07.08.2015 முதல் 31.01.2016 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கை அவைக்கு தாக்கல் செய்து பின் ஒப்புதல் பெறப்பட்டது.

பொங்கும் நிதி செயலாளர் பொறியாளர் N. புண்ணியகோட்டி அவர்கள் 01.08.2015 முதல் 31.01.2016 முடிய உள்ள காலத்திற்கான வரவு செலவு அறிக்கையை அவையில் தாக்கல் செய்து ஒப்புதல் பெற்றார்.

புதுக்கோட்டை கிளை உறுப்பினர K.L. ஆரோக்கியசாமி மற்றும் வேலூர் கிளை உறுப்பினர் A.கிருஷ்ணகுமார் ஆகியோர் இயற்கை எய்தியதையொட்டி சங்கத்தின் நிதியுதவி வழங்கப்பட்டது.

வெளியீட்டுச்செயலாளர் பொறியாளர் S.K. கருப்புசாமி அவர்கள் பொறியியல் கதிர், நாட்காட்டி, நாட்குவடி, குறித்து உரையாற்றினார். அதை தொடர்ந்து மண்டல செயலாளர்கள் பொறியாளர்கள் R. தயாளகுமார் கிழக்கு மண்டல செயலாளர், B. நாகலிங்கம் வடக்கு மண்டல செயலாளர், H. ஜாகீர் உசேன் தெற்கு மண்டல செயலாளர், C. பன்னீர் செல்வம் மேற்கு மண்டல செயலாளர், C.P. மோகன் குமார் மைய மண்டல செயலாளர் ஆகியோர் கிளைச்சங்க செயல்பாடுகள் குறித்து உரையாற்றினார்கள்.

பொறியியல் இல்லம் பராமரிப்பு குறித்து இல்ல காப்பாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்கள் உரையாற்றினார்.

அடுத்த மைய செயற்குழுக்கூட்டம் சென்னை அல்லது மதுரையில் நடத்துவது எனவும் இடம், தேதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

புதுக்கோட்டை கிளையின் சார்பாக கிளைச் செயலாளர் பொறியாளர் G.அண்ணாமலை அவர்களும் மையச்சங்கத்தின் சார்பாக அமைப்பு மற்றும் சட்டச்செயலாளர் பொறியாளர் S. கண்ணன் அவர்களும் நன்றி கூற நாட்டுப்பண்ணுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

மையச் செயற்குழு கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பொதுப்பணித்துறை நீர்வளத்துறை பராமரிப்பில் உள்ள கண்மாய்களில் வண்டல் / கிராவல் மண் எடுப்பதற்கு அனுமதியளிக்கும் நடைமுறையில் சம்மந்தப்பட்ட உதவிப் பொறியாளர்களின் பங்களிப்பு இல்லாத வகையில் செயற் பொறியாளரால் தொழில் நுட்ப ஒப்புதல் வழங்கும் போது நிபந்தனைகளை நீக்கம் செய்ய பொது அறிவுரைகள் சம்மந்தப்பட்ட மண்டல தலைமைப் பொறியாளர்களுக்கு தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் வழங்கப்படவேண்டும் என தீர்மானிக்கபடுகிறது.

2. பொதுப்பணித்துறையில் நடுநிலையான நேர்மையான நிர்வாகம் நடைபெற துறைத்தலைமைக்கு IAS அதிகாரியை நியமிக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

3. பொதுப்பணித்துறை மண்டல தலைமைப் பொறியாளர்கள் அலுவலகங்களில் உள்ள வழக்குகளை உரிய முறையில் கையாள உடனடியாக சட்ட ஆலோசகர்கள் நியமித்து உதவிப் பொறியாளர்களின் பணிச்சுமையை குறைத்திட தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடம் கோரிக்கை வைத்திட தீர்மானிக்கப்படுகிறது..

4. 2014-15, 2015-16 ஆகிய ஆண்டுகளுக்கான உதவி செயற்பொறியாளர் பதவி உயர்வுக்கான காலி பணியிட மதிப்பீடு கருத்துருவை உடனடியாக அரசுக்கு அனுப்ப முதன்மை தலைமை பொறியாளர் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

5. பட்டயம் முடித்த பணி ஆய்வாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் / வரைவாளர் பதவி உயர்வு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

6. தகுதியுள்ள தொழில்நுட்ப உதவியாளர்களுக்கு இளநிலைப் பொறியாளர் பதவி உயர்வு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

7. பகுதிநேர பட்டம் பயின்ற இளநிலைப் பொறியாளர்களுக்கு உதவிப் பொறியாளர்களாக பதவி பெயர் மாற்றம் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8. மீதமுள்ள 29 உதவிப் பொறியாளர்கள், 19 இளநிலைப் பொறியாளர்களை பணிவரன்முறை செய்யவேண்டும் என கேட்டுக் கொள்ளப்படுகிறது.

9. தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகத்தில் நிலுவையிலுள்ள கோப்புகளை முடிக்க வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

10. சென்னை இல்லக் கட்டிட பராமரிப்பு பணிகளை ஏப்ரல் மாதத்தில் துவக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது.

# 20.03.2016 அன்று சென்னையில் நடைபெற்ற மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம்

தமிழ்நாடு பொறியியல் சங்கத்தின் மையச் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் 20.03.2016 அன்று காலை 10.30 மணிக்கு சென்னை சேப்பாக்கம் பொதுப்பணித்துறை வளாகத்தில் உள்ள சங்க அலுவலகத்தில் மாநிலத் துணைத்தலைவர் பொறியாளர் எஸ். பாஸ்கரன் அவர்கள் தலைமையிலும், பொதுச் செயலாளர் பொறியாளர் த.முருகேசன் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றது.

மாநிலத் துணைத் தலைவர் அவர்கள் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் பற்றி பேசினர். பொதுச்செயலாளர் தன்னுடைய உரையில் சங்க நடவடிக்கைகள் குறித்து விரிவாக பேசினார். மேலும் இளம் பொறியாளர்கள் / உதவி பொறியாளர்கள் முதுநிலைப் பட்டியல் குறித்து விரிவாக பேசினார். சுற்றுக்கு விடப்பட்டுள்ள இளநிலைப் பொறியாளர் / உதவி பொறியாளர் முதுநிலைப் பட்டியலை எப்படி கையாள்வது என்பது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

மையச்சங்க பொறுப்பாளர்கள் தங்களுடைய கருத்துக்களை தெரிவித்தார்கள்.

## தீர்மானங்கள் :-

1. தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களால் சுற்றுக்கு விடப்பட்டுள்ள இளநிலைப் பொறியாளர் / உதவி பொறியாளர் முதுநிலைப் பட்டியலை கையாளக்கூடிய பல்வேறு அம்சங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்டது. (இது தனியே பிரசுரிக்கப்பட்டுள்ளது).

2. உதவி செயற்பொறியாளர் (சிவில்) பதவி உயர்வுக்கான காலிப் பணியிட மதிப்பீடு கருத்துருவை உடனடியாக அரசுக்கு அனுப்ப தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களை வலியுறுத்த தீர்மானிக்கப்படுகிறது.

ஆபத்தில் துணிந்து போராடுபவன் பாதி வெற்றியை முதலிலே அடைந்து விடுகிறான்.

**FINANCE [Pension] DEPARTMENT**

**G.O.No.58, Dated 22nd February 2016.**

(Manmatha, Maasi - 10, Thiruvalluvar Aandu - 2047)

**ABSTRACT**

**GIS** - GROUP INSURANCE SCHEME for employees of Local Bodies, Aided Schools, Aided Colleges, Aided Technical Education Institutions including employees working under Nutritious Meal Programme, Panchayat Assistant / part time clerks and other part-time employees like Sanitary Workers, Over Head Tank / Power Pump Operators drawing consolidated pay / honorarium - Enhancement of lumpsum payment from Rs,1,50,000/- to Rs.3,00,000/- - Orders - Issued.

**Read:**

1. G.O.Ms.No.1515, Finance (Pension) Department, dated: 03.12.1973.
2. G.O.Ms.No.171, Education Department, dated: 02.02.1974.
3. G.O.Ms.No.1383, Rural Development and Local Administration Department, dated: 31.05.1974.
4. G.O.Ms.No.1386, Rural Development and Local Administration Department, dated: 31.05.1974.
5. G.O.Ms.No.1680, Rural Development and Local Administration Department, dated: 17.07.1974.
6. G.O.Ms.No.1471, Finance (Pension) Department, dated: 04.12.1974.
7. G.O.Ms.No.10, Finance (Pension) Department, dated: 02.01.1978.
8. G.O.Ms.No.132, Finance (Pension) Department, dated: 21.02.2006.
9. G.O.Ms.No.57, Finance (Pension) Department, dated: 22.02.2016.

**ORDER**:

The Tamil Nadu Government Servants' Family Benefit Fund Scheme, subsequently renamed as the Tamil Nadu Government Servants' Family Security Fund Scheme was extended to the employees of local bodies and the teaching/ non-teaching staff of the aided educational institutions. In the Government Order sixth read above, as both the Government of India and the Life Insurance Corporation of India had pointed out that the Family Benefit Fund Scheme was not in consonance with the Life Insurance Corporation of India Act, 1956, the employees of local bodies and aided educational institutions were brought under Group Insurance Scheme administered by the Life Insurance Corporation of India.

2. In the Government Order seventh read above, Government introduced the revised Group Insurance Scheme for the employees of all local bodies and the teaching / non-teaching staff of the aided educational institutions with effect from 1.1.1978.

According to the revised Group Insurance Scheme, the employees of Local Bodies and Aided Educational Institutions have to contribute a sum every month as fixed by the Government. The excess of premium payable to the Life Insurance Corporation of India over and above the contribution of the employees has to be shared among the Government, Local Bodies and the Management of aided educational institutions on a net cost basis.

3. As and when the monthly contribution and lumpsum amount payable under TNGSFSF Scheme were revised, the monthly contribution and lumpsum amount payable under GIS were also revised from time to time. In the Government Order eighth read above, a sum of Rs.30/- p.m. is deducted as subscribers contribution and a sum of Rs.1,50,000/- is paid as lumpsum amount directly paid by the LIC of India in the event of death of the subscribers under Group Insurance Scheme,

4. The Hon'ble Chief Minister of Tamil Nadu has made an announcement under Rule 110 of Tamil Nadu Legislative Assembly Rules on 19.02.2016 to enhance the lumpsum amount payable under Group Insurance Scheme to Rs.3,00,000/- and to deduct Rs.60/- per month from the salary of Employees of Local Bodies & Aided School Teachers, Employees working under Nutritious Meal Programme, Employees of Village Panchayats, Employees of Aided Colleges and Employees of Aided Technical Educational Institutions.

5. Accordingly, the Government issues the following orders:-

(i) In the case of death of an employee while in service, a sum of Rs.3,00,000/- (Rupees Three Lakh only) shall be paid to the legal heirs directly by the Life Insurance Corporation of India. The institutions shall follow the existing procedure in claiming the amount from Life Insurance Corporation of India.

(ii) The employees of Local Bodies, Aided Schools, Aided Colleges, Aided Technical Education Institutions including employees working under Nutritious Meal Programme, Panchayat Assistant / part time clerks and other part-time employees like Sanitary Workers, Over Head Tank / Power Pump Operators drawing consolidated pay / honorarium shall contribute Rs.60/- p.m. with effect from February 2016. These contributions shall be credited into Government account.

(iii) This order shall take effect from 1.2.2016.

(iv) There shall be no change in the existing rules.

(v) The local bodies shall remit their share as revised by Government per month per employee into the concerned Treasury/ Sub-Treasury in the Government account every month along with the employees' contribution. The dues of subscription and management contribution, if any, in respect of employees of local bodies under Group Insurance Scheme shall be recovered from Finance Commission grant / Devolution grant payable to the local bodies and remitted to Government under relevant head of account. The Orders regarding the local body share of contribution will be issued separately.

(vi) The Director of Treasuries and Accounts, the administrator of the Group Insurance Scheme, shall take necessary further action in this regard and report to the Government.

**(BY ORDER OF THE GOVERNOR)**

K.SHANMUGAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

**FINANCE (PGC) DEPARTMENT**

**G.O.No.59, Dated 22nd February 2016.**

(Manmatha, Maasi - 10, Thiruvalluvar Aandu - 2047)

**ABSTRACT**

**PENSION** - Contributory Pension Scheme - Settlement of accumulation under Contributory Pension Scheme in respect of CPS subscribers retired/resigned, died and terminated from service - Orders - Issued.

**Read:**

1. G.O.Ms.No.259, Finance (Pension) Department, dated: 06.08.2003.
2. G.O.Ms.No.430, Finance (Pension) Department, dated: 06.08.2004.
3. Government Letter No.54950, Finance (Pension) Department, dated, 29.09.2005.

**ORDER**:

In the Government Order first read above, Government introduced the Contributory Pension Scheme to Tamil Nadu Government employees who were recruited on or after 1.4.2003.

2. In the Government Order second read above, Government ordered that it is mandatory for all employees who were recruited on or after 1.4.2003 to become member of the Contributory Pension Scheme and each employee would pay a monthly contribution of 10% of Basic Pay and Dearness Allowance from his/her salary to the Contributory Pension Scheme and a matching contribution will be made by the State Government for each employee, who contribute to the Scheme.

3. The Hon'ble Chief Minister of Tamil Nadu has made an announcement under Rule 110 of Tamil Nadu Legislative Assembly Rules on 19.02.2016 on the floor of the Legislative Assembly that the accumulation under Contributory Pension Scheme in respect of subscribers retired / died will be settled immediately to retired employees and legal heirs of deceased employees.

4. Accordingly, the Government direct that the Contributory Pension Scheme accumulation i.e. the employee's contribution along with Government contribution and interest thereon upto the date of final authorisation in respect of those retired, resigned, died and whose services are terminated due to various reasons be

settled immediately, subject to obtaining an undertaking from the retired/resigned employees and legal heirs of deceased employees that they would not make any further claims under Contributory Pension Scheme.

5. The retired / resigned employee and legal heirs of deceased employee shall submit an application in the format prescribed in Annexure - I to this order for final settlement of the Contributory Pension Scheme accumulation.

6. The Head of the Department in the case of self-drawing officers and the Head of Office in the case of non-self drawing officers, shall be the competent authority to sanction final settlement of Contributory Pension Scheme accumulation in the CPS account of those retired, resigned, died and whose services are terminated due to various reasons. The Administrative Department of Secretariat or the Head of the Department or the Head of Office, as the case may be, shall send the application for final settlement of CPS Account to the Director of Treasuries and Accounts straightaway for authorisation. On receipt of the application for final settlement of CPS Account, the Director of Treasuries and Accounts shall apply the requisite checks and assess the amount of final settlement within a period of one month from date of receipt of application and send authorisation for final settlement of CPS Account in the format prescribed in Annexure - II to this order to the Government Data Centre, Chennai to issue of CPS Final Account Slip.

7. The Government Data Centre, Chennai shall issue Contributory Pension Scheme Final Account Slip in respect of CPS subscribers retired / resigned, died and terminated from service based on the authorization of the Director of Treasuries and Accounts, Chennai. Based on the authorization issued by the Director of Treasuries and Accounts and the CPS Final Account Slip issued by the Government Data Centre, the Head of the Department in the case of self-drawing officers and the Head of Office in the case of non-self drawing officers, shall issue sanction order for the final settlement of CPS account.

8. On receipt of sanction order issued by the sanctioning authority, the Drawing and Disbursing Officer concerned shall draw and disburse the amount by ECS mode.

9. In respect of local body employees, the Head of the Department concerned shall sanction, draw and disburse the amount by ECS mode based on the authorisation issued by the Director of Treasuries and Accounts.

10. The amount accrued at the credit of Contributory Pension Scheme Account in respect of CPS subscribers retired / resigned, died and terminated from service shall be debited to the respective head of account as detailed below:

| SL. NO. | Employee Category | Head of Account | |
|---|---|---|---|
| | | Employee's Contribution | Employer's Contribution |
| (1) | GOVERNMENT EMPLOYEES | | |
| | Subscription | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AA. Contributory Pension Scheme for Tamil Nadu State Government Employees - Employee's Contribution **[DPC 8342 00 117 AA 0004 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AB. Contributory Pension Scheme for Tamil Nadu State Government Employees - Government Contribution **[DPC 8342 00 117 AB 0002 (Outgo)]** |
| | Interest | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - IA. Interest on Contributory Pension Scheme for Tamil Nadu State Government Employees - Employees Contribution. **[DPC 8342 00 117 IA 0006 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - IB. Interest on Contributory Pension Scheme for Tamil Nadu State Government Employees - Government Contribution. **[DPC 8342 00 117 IB 0004 (Outgo)]** |
| (2) | EMPLOYEES OF AIDED EDUCATIONAL INSTITUTIONS | | |
| | Subscription | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AC. Contributory Pension Scheme for employees of Tamil Nadu Aided Educational Institutions - Employee's Contribution **[DPC 8342 00 117 AC 0000 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AD. Contributory Pension Scheme for employees of Tamil Nadu Aided Educational Institutions - Government Contribution **[DPC 8342 00 117 AD 0008 (Outgo)]** |
| | Interest | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants IC. Interest on Contributory Pension Scheme for employees of Tamil Nadu Aided Educational Institutions - Employee's Contribution **[DPC 8342 00 117 IC 0002 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - ID. Interest on Contributory Pension Scheme for employees of Tamil Nadu Aided Educational Institutions - Government Contribution**[DPC 8342 00 117 ID 0000 (Outgo)]** |
| (3) | EMPLOYEES OF PANCHAYAT UNION SCHOOLS | | |
| | Subscription | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Sevants - AG. Contributory Pension Scheme for Panchayat Union Schools - Employee's Contribution **[DPC 8342 00 117 AG 0002 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Sevants - AH. Contributory Pension Scheme to Panchayat Union Schools - Government Contribution **[DPC 8342 00 117 AH 0000 (Outgo)]** |

| SL. NO. | Employee Category | Head of Account | |
|---|---|---|---|
| | | Employee's Contribution | Employer's Contribution |
| | Interest | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - IG.Interest on Contributory Pension Scheme for employees of Panchayat Union Shools - Employee's Contribution **[DPC 8342 00 117 IG 0004 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS -117. Defined Contribution Pension Scheme for Government Servants - IH.Interest on Contributory Pension Scheme for employees of Panchayat Union Shools - Government Contribution**[DPC 8342 00 117 IH 0002 (Outgo)]** |
| **(4)** | **EMPLOYEES OF MUNICIPAL SCHOOLS** | | |
| | **Subscription** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AI. Contributory Pension Scheme for Municipal Schools - Employee's Contribution **[DPC 8342 00 117 AI 0008 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AJ. Contributory Pension Scheme for Municipal Schools - Government Contribution **[DPC 8342 00 117 AJ 0006 (Outgo)]** |
| | **Interest** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - II. Interest on Contributory Pension Scheme for Employees of Municipal Schools - Employees Contribution. **[DPC 8342 00 117 II 0000 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - IJ. Interest on Contributory Pension Scheme for Employees of Municipal Schools - Government Contribution. **[DPC 8342 00 117 IJ 0008 (Outgo)]** |
| **(5)** | **LOCAL BODY EMPLOYEES** | | |
| | **Subscription and Interest** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AN. Contributory Pension Scheme for Tamil Nadu Local Body Employees - Employee's Contribution **[DPC 8342 00 117 AN 0008 (Outgo)]** | 8342.00. OTHER DEPOSITS - 117. Defined Contribution Pension Scheme for Government Servants - AO. Contributory Pension Scheme for Tamil Nadu Local Body Employees - Government Contribution **[DPC 8342 00 117 AO 0006 (Outgo)]** |

**(BY ORDER OF THE GOVERNOR)**

K.SHANMUGAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

# LIST OF JUNIOR ENGINEERS (CIVIL) WHOSE SERVICES ARE REGULARISED(Annexure to EIC, WRD. & CE (GL) PWD., CHENNAI'S LR NO.PROCc.NO. S2(4)32238/2014/ DT: 29.01.2016)

